| TNVR130004072025 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை–திரு.ஆர்.சதீஷ், எம்.எல்.,<br>சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை<br>2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 21 ம் நாள் செவ்வாய்க்கிழமை<br>**அ.வ.எண்.212/2025** |
|---|---|

பெருமாள் ... வாதி

/எதிர்/

1. பாலகிருஷ்ணன்
2. சண்முகலட்சுமி
3. நவநீதகிருஷ்ணன்
4. வினிதா
5. விஜயகுமார் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 21.07.2026 ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத நிலையில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

<u>தீர்ப்புரை</u>

தாவாச் சொத்துக்களை மூன்று சம பாகங்களாக பிரித்து அதில் வாதிக்குரிய ஒரு நயமிடர் பார்த்து பிரித்து தர ஏதுவாக ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:–**

தாவா சொத்துக்களுக்குரிய உரிமையாளரான லேட்.முனியாண்டியின் வாரிசுகள்தான் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் கணவரான

கோவிந்தன் ஆவார்கள். மேற்படி லேட்.முனியாண்டி கடந்த 14.12.2009 ல் காலமாகிவிட்டார். லேட்.முனியாண்டி எந்த ஒரு பாகப்பிரிவினை செய்யாமலும் ஆவணங்கள் ஏதும் ஏற்படுத்தாமலும் அவரது மனைவியான சுப்பம்மாள், கோவிந்தன், பெருமாள்(வாதி), பாலகிருஷ்ணன் (1ம் பிரதிவாதி) ஆகியோர்–களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துபோய்விட்டார். இந்நிலையில் மேற்படி முனியாண்டியின் மனைவி மற்றும் வாதியின் தாயாரான சுப்பம்மாள் கடந்த 14.09.2022 ல் இறந்துவிட்டார். அதன்பிறகு 2ம் பிரதிவாதியின் கணவரான கோவிந்தன் கடந்த 07.07.2023 ல் இறந்துவிட்டார். மேற்படி கோவிந்தனின் மனைவி 2ம் பிரதிவாதி மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகள் அவரது மக்கள் ஆவார்கள். வாதியின் தந்தை லேட்.முனியாண்டி வாழ்நாள் காலத்தில் தபசில் சொத்துக்களில் வீடுகள் கட்டி இருந்தார். அந்த வீடுகளுக்கு இன்றுவரை வீட்டுவரி, மின்சார வரி, மின் இணைப்பு அனைத்தும் லேட்.முனியாண்டி பெயரிலேயே பதிவாகியுள்ளது. வாதியின் தகப்பனார் மறைவுக்கு பிறகு தபசில் கண்ட சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்திலும், உரிமையிலும் இன்றுவரை உள்ளது. இதற்கிடையில் பிரிக்கப்படாமல் இருந்த பொது சொத்துக்களை பிப்ரவரி 2023 தேதியில் பிரித்துக்கொடுக்கும்படி பிரதிவாதிகளிடம் வாதி கேட்டுள்ளார். ஆனால் பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்து கொடுக்காமல் பல்வேறு காரணங்களை சொல்லி காலதாமதம் செய்து வருகின்றனர். அதனால் வாதி தபசில் சொத்துக்களில் தனக்குரிய பாகத்தை கோரி பிரதிவாதிகளுக்கு கடந்த 18.11.2024 ல் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதை பெற்ற பின்பும் பிரதிவாதிகள் வாதிக்குரிய பாகத்தை பிரித்துக்கொடுக்க முன்வரவில்லை. தபசில் சொத்துக்களில் வாதிக்கு 3 ல் ஒரு பங்கு முழு உரிமை உள்ளது. எனவே மேற்படி தாவா சொத்துக்களில் வாதிக்குரிய 1/3 பங்கு பாகத்தை பிரித்து பெற வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**3.** இவ்வழக்கில் வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1 முதல் 5 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத நிலையில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் எதுவும் முன்னிறுத்தப்படவில்லை.

4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவெனில், வாதி கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா என்பதேயாகும்.

**5.** வாதிதரப்பில், தாவா சொத்துக்கள் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் கணவர் ஆகியோரின் தகப்பனாரான முனியாண்டி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து எனவும், மேற்படி முனியாண்டிக்கு அவரது மனைவி சுப்பம்மாள், வாதி, 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் கணவரான கோவிந்தன் ஆகியோர் வாரிசுகள் எனவும், இதில் வாதியின் தகப்பனார் முனியாண்டி, தாயார் சுப்பம்மாள், 2ம் பிரதிவாதியின் கணவரான கோவிந்தன் ஆகியோர் இறந்தபின்பு தாவா சொத்துக்களை வாதி மற்றும் பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்துக்களுக்கு வீட்டு வரி, மின்சார வரி, மின் இணைப்பு அனைத்தும் வாதியின் தகப்பனார் முனியாண்டி பெயரிலேயே பதிவாகி உள்ளதாகவும், இதற்கிடையில் பிரிக்கப்படாமல் பொதுவில் உள்ள தாவா சொத்துக்களில் தனக்குரிய 1/3 பங்கு பாகத்தை பிரித்து தரும்படி வாதி பிரதிவாதிகளிடம் கேட்டபோது பிரதிவாதிகள் வாதிக்குரிய 1/3 பங்கு பாகத்தை பிரித்துக் கொடுக்காமல் காலதாமதம் செய்து வருவதாகவும், அதனால் வாதி தனக்குரிய பாகத்தை பிரித்து கொடுக்கும்படி வழக்கறிஞர்மூலம் அறிவிப்பு அனுப்பி அதை பெற்றுக் கொண்ட பிரதிவாதிகள் எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பாமலும்,

வாதிக்குரிய பாகத்தை பிரித்துக் கொடுக்காமலும் உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

**6.** வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் வாதி பெருமாள் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ,10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.1 தனது சாட்சியத்தில் வாதி தரப்பு வழக்கு குறித்து சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களானது வாதியின் தந்தை முனியாண்டி மற்றும் தாயார் சுப்பம்மாளின் இறப்புச் சான்றிதழ்களாக காணப்படுகிறது. வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில், மேற்படி முனியாண்டிக்கு வாதி, 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் கணவரான கோவிந்தன் ஆகியோர் வாரிசுகளாக உள்ளனர் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில் தாவா 2வது லக்க சொத்துக்கு முனியாண்டி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில் தாவா 1வது லக்க சொத்துக்கு முனியாண்டி பெயரில் பட்டா மற்றும் சிட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில் தாவா சொத்துக்களுக்கு முனியாண்டி பெயரில் வீட்டுவரி செலுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.8, வா.சா.ஆ.9 ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில் தாவா சொத்துக்களில் தனக்குரிய பாகத்தை பிரித்து தரக்கோரி வாதி தனது வழக்கறிஞர்மூலம் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பி அதை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.10 ஆவணமானது தாவா சொத்துக்களுக்குரிய வழிகாட்டி மதிப்பாக காணப்படுகிறது.

**7.** வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொதுக்குடும்ப சொத்து எனக் கூறி தாவா சொத்துக்களில்

பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொதுக்குடும்ப சொத்து என்பது குறித்தும், தாவா சொத்துக்களில் பிரதிவாதிகள் வாதிக்குரிய பாகத்தை பிரித்து தராமல் காலம் தாழ்த்தி வருவது குறித்தும் வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்து தங்களுக்கு மட்டும் தனிப்பட்ட சொத்து என்பதாக எவ்வித மறுப்புரையும் தாக்கல் செய்யாமல் தோன்றாத்தரப்பினர்களாகியுள்ளார்கள்.

**8.** ஆகையால், வாதி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட வா.சா.1ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவண சாட்சியங்கள் மூலம் தாவா சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளின் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. வாதி அவரது தரப்பில் முதன்மை வழக்கு உள்ளது என்பதை போதிய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்தின் அடிப்படையில் வழக்குரையை ஒத்து நிரூபணம் செய்துள்ளார். பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத நிலையில் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, வாதி கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**9.** முடிவாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது. தாவா சொத்துக்களை 3 சம பாகங்களாக பிரித்து அதில் வாதிக்குரிய 1 பாகத்தை தனித்து பிரித்து பெற தோதாக பாகத்திற்கான முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 21ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SATHISH Digitally signed by SATHISH Date: 2026.07.21 19:03:15 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>

வா.சா.1 – பெருமாள் (வாதி)

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | |
|---|---|
| வா.சா.ஆ.1. 14.12.2009 | முனியாண்டியின் இறப்புச்சான்றிதழ் |
| வா.சா.ஆ.2.14.09.2022 | சுப்பம்மாளின் இறப்புச் சான்றிதழ் |
| வா.சா.ஆ.3.24.11.2024 | முனியாண்டியின் வாரிசு சான்றிதழ் |
| வா.சா.ஆ.4. 05.11.2024 | முனியாண்டி பெயரில் சர்வே எண் 7/8H–க்குரிய பட்டா |
| வா.சா.ஆ.5. 07.11.2024 | சர்வே எண் 26/25 ஏ–க்கு முனியாண்டி பெயரில் உள்ள சிட்டா |
| வா.சா.ஆ.6. 01.08.1987 | சர்வே எண் 26/25 ஏ–க்கு முனியாண்டி பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா |
| வா.சா.ஆ.7. --- | முனியாண்டி பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் |
| வா.சா.ஆ.8.18.11.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.9. --- | அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.10. 05.05.2025 | வழிகாட்டி மதிப்பு |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

SATHISH Digitally signed by SATHISH Date: 2026.07.21 19:03:22 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண்.212/2025
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் : 21.07.2026